International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 1 Jan - Mar 2026

Published on 14, Jan - Mar 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# தஞ்சாவூர் மாவட்ட தொன்மையும், சிறப்புகளும் - வரலாற்று ஆய்வு

**முனைவர் ச. தேன்மொழி**
உதவிப் பேராசிரியர்
அ. வீ. வா. நி. திரு புஷ்பம் கல்லூரி (தன்னாட்சி)
பூண்டி-613 503, தஞ்சாவூர் மாவட்டம்

**ஆய்வுச் சுருக்கம்**

வரலாறு என்பது உணர்ச்சிகளின் தொகுப்பு அல்ல உண்மை நிகழ்வுகளின் தொகுப்பு ஆய்வுலகிற்கு அரிய பாடங்களைத் தருவது. வரலாறு என்பது கடந்த காலத்தின் நிகழ்வுகளையும், வாழும் காலத்தின் நிகழ்வுகளையும், எதிர்காலத்தின் நிகழ்வுகளையும் உயிர்ப்பித்து காட்டுவது. ஒரு நாட்டின் வரலாற்றிற்கு அந்நாட்டின் இலக்கியங்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள், கலைகள், மொழிகள் சான்று பகர்வன. ஆத்தகைய பெருமைகளை உடைய தஞ்சாவூர் மாவட்டம் தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாக விளங்குவதோடு இம்மாவட்டத்தின் தலைநகராகச் சிறப்புடன் விளங்கி வருகிறது. இப்போதுள்ள சில பெரிய நகரங்கள் முன்னர் சிற்றுர்களாயிருந்து ஆங்கிலேயர் ஆட்சியல் 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் மாநகர்களாகி பெருமை பெற்றுள்ளன. இத்தகைய நகரங்களுள் தஞ்சாவூர் அண்மையில் தோன்றி வளர்ச்சி எய்திய நகரமன்று இது பழமை வாய்ந்த நகரம் ஆகும். பல பழமையான சின்னங்களை தன்னகத்தேக் கொண்டு பாரம்பரியத்தை பறைசாற்wp திகழ்வதோடு, வளமான கலை, இலக்கியம், இசை, நடனம், கைத்தொழிலுக்கும் பெயர்பெற்று விளங்குகிறது.

**முன்னுரை**

தஞ்சாவூர் சோழர், முத்திரையர், நாயக்கர், மராட்டியர் கால தலைநகரமாக விளங்கியது. இன்றளவும் தஞ்சாவூர் தமிழ்நாட்டின் மாவட்டங்களில் ஒன்றாக சிறப்புப் பெற்று வருகிறது. தஞ்சாவூரின் வரலாற்றுச் சிறப்புகள் அதன் தொன்மை வரலாறு மற்றும் தஞ்சாவூர் பெயர்க்காரண நிலைகளை கருதுக் கோளாக் கொண்டு இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

**தொன்மை வரலாறு**

தஞ்சாவூர் பற்றிய தொன்மையான வரலாற்று ஆவணக்குறிப்புகள் சில இலக்கியங்களில் உள்ளன. கி.பி.7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பர் சுவாமிகளின் திருவீழிமிழலை திருத்தாண்டவத்தில் சொல்லப்படும் குறிப்பே தஞ்சைப் பற்றி அறியும் முதல் சான்று,

**உஞ்சேனை மாகாளம், ஊறல், ஒத்தூர்**
**உருத்திரகோடி, மறைக் காட்டுள்ளும்**
**மஞ்சு ஆர்பொதியில் மலை தஞ்சை வழுவூர்**
**வீரட்டம் மாதானம் கேதாரத்துவம்**[1]

மேலும்,

**அஞ்சைக் களத்து உள்ளார் ஐயாற்று உள்ளார்**
**ஆரூரார் பேரூரார் அழுந்தூர் உள்ளார்**
**தஞ்சைத் தளிகுளத்தார் தக்களூரார்...**[2]

இவ்வரிகளைப் பாடிய அப்பர் என்ற திருநாவுக்கரசர் கி.பி.7ஆம் நூற்றாண்டில் முதலாம் மகேந்திரவர்மன் காலத்தில் வாழ்ந்தவர். இவர் கி.பி. 7ஆம் நூற்றாண்டில் 'தஞ்சை என்ற ஊரில் "தளிக்குளம்" என்ற 'குளம்' இருந்திருக்க வேண்டும் என்றும் அக்குளத்தின் நடுவில் சிவாலயம் இருந்திருக்கலாம்"[3] என்றும்.

இத்தகைய அடியார்களின் வரலாறுகளை கூறுவதிலிருந்து கி.பி. 7ஆம் நூற்றாண்டுக்கு முன்பே இந்தச் சிவாலயங்கள் திகழ்ந்தன என்பதனை உறுதியாகக் கொள்ள முடியும். கி.பி. 5, 6 ஆம் நூற்றாண்டுகளில் தஞ்சை எனும் ஊரும், தளிக்குளத்துச் சிவாலயமும் இருந்திருக்க வாய்ப்புகள் உள்ளன.[4] என்ற சான்றுகளின் வழி தஞ்சையில் கி.பி. 5, 6ஆம் நூற்றாண்டுகளில் சிவ வழிபாடு இருந்து உள்ளதைப் பற்றி அறிய முடிகிறது.

**தஞ்சாவூர்- காரணப்பெயர்**

தஞ்சாவூர் பெயர் காரணம் குறித்து பல்வேறு மாறுபட்ட கருத்துகள் உள்ளன. அவை பின்வருமாறு:

தஞ்சாறை என்பதே இந்நகரின் பழம்பெயர் என்பர். 'ஆறை (மதில் அரண் அல்லது கோட்டை) இருந்த இடம்' என்றும், தஞ்சாறை தஞ்சாவூர் என்றும்[5] இவ்வூரில் பராசர முனிவர் தவஞ்செய்த போது தஞ்சன், தாரகன், தாண்டகன் என்னும் அசுரர் களால் துன்புறுத்தப் பட்டபோது திருமாலிடமும் துர்க்கையிடமும் அவர் முறையிடத் திருமால் தஞ்சன், தாண்டக னையும், துர்க்கை தாரகனையும் அழித்தனர். அப்பொழுது தஞ்சன் அம்பிகையிடம் இவ்வூர் தன் பெயரால் அழைக்கப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டான். அது முதல் அளகை நகர், தஞ்சன் ஊர் தஞ்சைபுரி -தஞ்சாவூர் என வழங்கலுறுகிறது.[6]

தஞ்சையின் வடக்கே வெண்ணாற்றங்கரையில் உள்ள பழமையான சிவாலயம் தஞ்சபுரீசுவரர் கோயில், அம்மன் ஆனந்தவல்லி. சிலர் பழைய தஞ்சாவூர் இக்கோயில் உள்ள பகுதியே என்று கூறுகின்றனர். தஞ்சபுரி-தஞ்சாவூர் என்பது தொடர்புடைய பெயர்கள் என்று காட்டுகின்றனர்.

தஞ்சன் என்ற அரக்கன் ஆனந்தவல்லியால் கொல்லப்படும் போது அவன் வேண்டுகோளுக்கி ணங்க இவ்வூருக்குத் தஞ்சன் + புரி = தஞ்சபுரி என்று பெயர் வைத்ததாகக் கூறுவர். 'தஞ்சன்' முதலிய அரக்கர்களைக் கொல்லும் போது ஆனந்தவல்லி கோடியம்மன் என்ற வடிவெடுத்துக் கொன்றதாகப் புராணம் கூறும். ஆனந்தவல்லி அம்மன் கோயிலருகே இன்றும் எல்லைத் தெய்வமாகக் 'கோடியம்மன்' கோயில் உள்ளது.[7]

என்றும்,

ஒரு வேளை, மற்றொருவருக்குத் தஞ்சம் கொடுத்து ஆதரித்ததனால் 'தஞ்சம் கொடுக்கும் நகரம்' என்று பெயர் பெற்று அது 'தஞ்சாவூர்' ஆகியிருக்கலாம்.[8] என்றும்,

கோரையில் சிறந்தது 'சாய்' எனப்பெறும் சம்புக் கோரை, தமிழ் நாடெங்கும் நதிக்கரைகளில் இது வளரினும், பொன்னியும் பொருநையும் பாய்கின்ற தஞ்சை மாவட்டமும், நெல்லை மாவட்டமும் சிறந்த சாய்க்கோரை கொண்டவை. இதனால் தாமிரபரணியில் வளரும் சாய் வேய்ந்த பத்தமடைப் பாய்களும், தஞ்சையில் கொள்ளிடக் கரையும், அம்மாப்பேட்டையும் உருவாக்கும் கோரைப் பாய்களும் உலகப் பெயரீட்டியவை. சாயின் சிறப்பறிந்த தமிழ் மக்கள் சாய் செறிந்த ஊர்கட்கெல்லாம் வழக்கம் போல் மூலிகைப் பெயரிட்டுள்ளனர். நெல்லை மாவட்டத்தின் சாயர்புரம் (சாய்புரம்), சாய் நத்தம் (சானத்தம்), சம்பந்தர் பாடல் பெற்ற தஞ்சை மாவட்டச் சாயக்காடு (பூம்புகார்) போன்றவை சான்றுகள். இந்த அடிப்படையில் ஆய்ந்தால் தஞ்சாவூரின் பண்டை நாட் பெயர் தண் சாய் ஊர்.[9] தஞ்சையை அடுத்த சிற்றூர்களான தண்டாங் கோரை, பூங்கோரை போன்ற ஊர்ப்பெயர்களும் சான்றுகளாகும். நெட்டி மூலம் நடைபெறும் கைவினைத் தொழில் இன்னும் இம்மாவட்டத்தில் தான் தழைத்தோங்குகிறது. இவ்வடிப்படையில் சம்புக்கோரை நிறைந்த இடம் சம்புவனம் அன்றி வடமொழியில் நாவல் மரத்தைக் குறிக்கும். 'ஜம்பு' என்ற அடிப்படையில் பிறந்த பெயர் அன்று என்பது தெளிவு[10] என்று மூலிகை அடிப் படையிலும் இவ்வூர்ப் பெயர் அமைந்துள்ளது.

'ஆவூர்' என்பது சோழநாட்டின் மிகத் தொன்மையான ஊர்களில் ஒன்று. ஆவூர் மூலக்கிழார் என்ற சங்கப் புலவர் வாழ்ந்த ஊர். தேவாரப் பாடல் பெற்ற தலம். சங்க காலத்திற்குப் பின் விசயாலயன் காலம் வரை முற்காலச் சோழர்கள் பன்னெடுங்காலம் அப்பகுதியில் தங்கியிருந்தனர். அப்பகுதிக்குப் பழங்காலத்தில் 'செம்பியங்கிழார் நாடு" என்று பெயர். கண்டியூரில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டால் அது தெரியவருகிறது.[11]

தஞ்சைக்கு ஆவூரிலிருந்து வந்த சோழர்கள் தஞ்சையுடன் தம் ஆவூரையும் சேர்த்து 'தஞ்சை ஆவூர்' என வழங்கியிருக்கலாம். பின் அப்பெயரே தஞ்சாவூர் என ஆகியிருக்கலாம். பல்லவர் கல்வெட்டு, முத்திரையர் கல்வெட்டு, ஆழ்வார்கள் பாடல், திருநாவுக்கரசர் தேவாரம், விசயாலயன் கல்வெட்டு ஆகிய தொன்மையான வற்றில் 'தஞ்சை' என்ற பெயரே காணப்படுகிறது. ஏறக்குறைய முதல் பராந்தகன் காலத்தில்தான் 'தஞ்சாவூர்' என்ற பெயர் வழங்கத் தொடங்கியது என்பர்.[12]

தஞ்சை போலவே சோழநாட்டின் தொன்மையான ஊர்கள் பல ஐகாரத்தால் முற்றுப்பெற்று விளங்கின. இரும்பூளை, இலந்தை, உறந்தை, கழிப்பாலை, குடந்தை, குறுக்கை, கொடும்பை,

தண்டலை, தில்லை, நாகை, பழையாறை, புன்னமங்கை என்பன. இவற்றால் 'தஞ்சை' என்பதே பண்டைய வழக்கு [13] என்று குறிப்பிடப் படுகிறது.

செந்தமிழ் நாடாகிய சோழநாட்டின் தலைநகர் தஞ்சை - தஞ்சாவூர் ஆகும். சோழ வளநாடு நீர்வளம் மிக்கது. நீர் மிகுதியாகப் பாய்வதால் வயல்கள் எப்பொழுதும் குளிர்ச்சிப் பொருந்திய னவாக மாறின. அவை தண் + செய் = தண்செய் எனப்பட்டன. தண்செய் என்ற பெயரே பின்னாளில் 'தஞ்சை' என மாறியது[14] என்பர் என்று கூறுவதிலிருந்து தஞ்சாவூர் எனும் பெயர் பெற்றமைக்குப் பல காரணங்கள் உள்ள போதும், தஞ்சாவூர் என்னும் பெயர் எப்படி அமைந்திருந்தாலும் வரலாற்றில் பின்னால் நிகழ்ந்த நிகழ்ச்சிகளின் மூலம் தஞ்சம் அடைந்தவர்களுக்குப் புகலிடமாக விளங்கியதால் 'தஞ்சம் தந்த ஊர் தஞ்சாவூர்" என்ற பெயரே மிகவும் பொருத்தமானதாகத் தோன்றுகிறது.

### தஞ்சையில் கிடைக்கக் கூடிய கலைப் பொருள்கள்

தஞ்சை என்றவுடன் நினைவுக்கும் வரும் கலைப் பொருள்கள் தலையாட்டி பொம்மை, கண்ணாடித் தட்டு, கலைத்தட்டு, ஓவியம், மாலை, வீணை போன்றவை ஆகும். இக்கலைப் பொருள்களின் சிறப்பினை[15] பற்றியும் பின்வருமாறு அறிய முடிகிறது.

### தலையாட்டி பொம்மை

கனமான அரை உருண்டை அடிப்பாகத்தையும் மேலே கனமற்ற இலேசான பகுதியையும் கொண்டு எப்படிச் சாய்த்தாலும் நேராக நிற்கும் அதிசய பொம்மை. இப்பொம்மைகள் ஆண் பெண் முகம் கொண்டு அதற்கேற்ற உடை அணிகலன்களுடன் காணப்படும். இப்போது அரசன், அரசி, செட்டியார், கோமாளி வடிவத்திலும் செய்கின்றனர்.

வெண்கரை (அரைத்த சுண்ணாம்பு) கிழங்கு மாவுப்பசை, புளியங்கொட்டை பசை, துருசு (மயில் துத்தம்), காகிதம், நீர், சாயம், சுண்ணாம்புத்தூள் ஆகிய மூலப்பொருட்கள் உருவ அச்சில் வார்த்தெடுத்த பொம்மையில் மேல்பகுதியில் ஒன்பது காகிதங்களை ஒட்டிக் களிமண்ணைத் தட்டி எடுத்து விடுவர் உறுப்புகள் படைப்பு, படைப்பு இன்றி இருவகையாகச் செய்யப்பட்டு வண்ணம் பூசிக் கண் திறந்து வார்னிஷ் அடித்து விற்பனைக்குத் தயாராகிறது.

### கண்ணாடித் தட்டு

அலுமினியத்தட்டில் நிறமேற்றிய கண்ணாடியைக் கொண்டும், ரசக்கண்ணாடித் துண்டுகளைப் பதித்தும் கையினால் செய்வது கண்ணாடித் தட்டு ஆகும். சுக்கான் மாவுப் பசை, தங்க நிறத்தாலான மூலப் பொருள்களைக் கொண்டு 5 அங்குலமும் முதல் 14அங்குலம் வரை பல்வேறு அளவுகளில் தட்டுக்கள் செய்யப்பட்டன. வெல்வெட்டுத் துணி நடுவே பதிக்கும் பொம்மைகள் வெளியூரிலிருந்து இறக்குமதி செய்வதில் சிரமம் உள்ளது.

### ஓவியம்

பலாமரப்பட்டையில் புளியங்கொட்டை பசையைத் தடவி அட்டையை உருட்டி, இவற்றின் மேல் புளியங்கொட்டை பசை மட்டி இலைகளைத் தடவி மில்துணியை ஒட்டுவர் தோப்புக்கல் என்ற கல்லைக் கொண்டு தேய்த்து வடிவமைப்பு ஏற்படுத்தி சித்திரம் வரைவர். தெய்வீக ஓவியங்களே வரையப்படும் கீழவாசல் அருகில் உள்ள கொண்டி ராஜபாளையம் சித்திரகாரர் களுக்கு அளிக்கப்பட்ட ஊர் இப்போது பிறரும் செய்து வருகின்றனர்.

### மாலை

சம்பா நெல்லைப் பொறுக்கித் தூய்மையாக்கி மஞ்சள் நிறமேற்றி ஈர்க்குச்சிக்கட்டு இடையே பூத்தொடுப்பது போல் நெல்மணிகளை வைத்துப் பொடியாக்கி மாலை தயார் செய்வர் ஜவ்வாது சந்தனத்தை உருண்டையாக உருட்டி துவாரம் செய்து கோர்த்து மாலையாக்குவார். ரோஜா மல்லிகைமாலை போன்று நெட்டியிலும் செய்வர்.

### கலைத்தட்டு

உலகப்புகழ் பெற்றவர் முன்டி பித்தளையில் மட்டுமே கலைத்தட்டுக்கள் இருந்தன. பித்தளைத் தட்டின் நடுவே ஈய அச்சுக்கட்டையில் உருவாக்கப்பட்ட உருவத்தைப் பதிப்பர். அதன் உள்ளே அரக்கு இருப்பதால் உருவம் நசுங்குவ தில்லை. பித்தளை. செம்பு, வெள்ளி உலோகங் களில் மேல் பதித்து மூன்று உலோகக் கலவை யாகத் தட்டுக்கள் உருவாக்கப்படுகின்றன. உருவாக்கப்பட்ட தட்டை கரித்தூள் நெல் உமி தூவித் தேய்த்து, புளி பூவந்திக்கொட்டை ஊற வைத்து தண்ணீரில் கழுவி மெருகேற்றி விற்பனைக்குத் தயார் செய்கின்றனர்.

### வீணை

பலா மரத்தைத் துண்டாக்கிப் பானை வடிவில் குடைந்து பலகையால் மூடி வேலைப்பாடுகள் செய்து மரம் அல்லது தந்தமொட்டு அமைத்து வெண்கலம் அல்லது வெள்ளிப்பட்டைப் பொருத்தி தண்டுயாளிமுகம் சேர்த்து யாளி முகபத்தைத் தாங்கும் சுரைக்குடுக்கையுடன் வீணை தயாராகிறது. பதப்படுத்தி மெழுகு, அரக்கு ஆகியவற்றால் மேடாக்கப்படுகிறது. 24 உலோகக் கட்டிகளை அருகில் சத்தம் பார்த்து பொருத்துகின்றனர். இதற்கு மேளம் கட்டில் என்று பெயர். யானைத் தந்தம், மான் கொம்பு, சுரைக்குடுக்கை ஆகியவற்றிற்குப் பதிலாக இப்பொழுது பிளாஸ்டிக் பயன்படுத்தப்படுகிறது. சுரைக்குடுக்கைக்காக காகிதம், பைபர் பயன் படுத்தப்பட்டு வருவதை அறிய முடிகிறது.

### தஞ்சாவூரின் சிறப்பு

தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயம், கும்பகோணம் அருகில்உள்ள ஐராதீஸ்வரர் கோயில் போன்றவை யுனெஸ்கோ உலக பிராதன சின்னங்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளது.

இம்மாவட்டம் முழுவதும் காவிரி ஆறும், அதன் கிளை நதிகளும் பாய்ந்து எல்லா இடங்களையும் வளமுள்ள பகுதிகளாக மாற்றியுள்ளது. காவிரியின் குறுக்கே கரிகாலன் கல்லணையைக் கட்டினார். இம்மாவட்டத்தில் கொள்ளிடம், வெண்ணாறு, குடமுருட்டியாறு, அரிசிலாறு, பாமினி ஆறு, கோவை ஆறு, வீர சோழிய ஆறு, வடஆறு, திருமலைராயன், ஆறு போன்ற வீரசோழிய ஆறு, வட ஆறு, திருமலைராயன் ஆறு போன்ற ஆறுகள் பாய்ந்து தஞ்சாவூர் பகுதியைச் செழுமைப்படுத்திகின்றன.[16]

12 ஆண்டுகளுக்கு ஒருமுறை கும்பகோணத்தில் நடைபெறும் மகாமகத் தீர்த்தத்தில் நீராடினால் பாவங்கள் அகலும், சனிபகவானுக்கான தனிக் கோயில் குச்சனூரில் உள்ளது. திருவையாற்றில் தியாகராஜ சுவாமிகளின் நினைவைப் போற்றும் வகையில் ஜனவரி மாதம் 8 நாட்கள் இசைத் திருவிழா நடைபெறும். மேலும் முருகனின் அறுபடை வீடுகளில் ஒன்றான சுவாமிமலை இங்கு உள்ளது.

## முடிவுரை

தமிழ்நாட்டிற்கு ஐரோப்பியரின் வருகையால் 18, 19ஆம் நூற்றாண்டில் பல்வேறு சிறு சிறு ஊர்களாக இருந்த பகுதிகள் பெரியநகரங்களாக மாறியிருக்கின்றன. தஞ்சாவூர் அண்மையில் தோன்றிய நகரமன்று. இது பழமை வாய்ந்த நகரம் ஆகும். காவிரியின் வளம் பெருகி பாய்ந்து நலம் சேர்த்த பூமி தஞ்சை தரணி ஆகும். மதுரை, காஞ்சி நகரங்களைப் போன்று வரலாற்றுப் பெருமைக் கொண்ட பழமையான நகரமான தஞ்சாவூர் நீர் வளம் மிக்க பகுதியாதலால் வயல்கள் எப்பொழுதும் குளிர்ச்சி பொருந்தியனவாக உள்ளன. இது நீர் வளத்திலும், நில வளத்திலும், சமய வாழ்விலும், நாகரிக வாழ்விலும் உயர்நிலையில் உள்ளது. இம்மாநகர் முத்தரையர், சோழர், நாயக்கர், மராட்டியர், ஆங்கிலேயர் ஆகியோர் ஆட்சிக் காலங்களில் பெருமையுடனும், சிறப்புடனும் திகழ்ந்து இன்றளவும் பலப் புதிய சிறப்புகளைப் பெற்று உயர்நிலையில் இருந்து வருகிறது.

## அடிக்குறிப்புகள்

1. திருநாவுக்கரசர், தேவாரத்தலமுறை 6-ம் திருமுறை, ஷேத்திரக் கோவை, திருத்தாண்டவம், பா.6:70:8.
2. மேற்படி, பா. 6:70:8.
3. குடவாயில் பாலசுப்ரமணியன், தஞ்சாவூர், ப.7.
4. மேற்படி, ப.7.
5. சோமலே,தஞ்சாவூர் மாவட்டம், ப.287.
6. கேவி.பக்கிரிசாமி, தஞ்சாவூரும் பெரியக்கோவிலும், பக். 25-26.
7. செ.இராசு. தஞ்சை மராட்டிய செப்பேடுகள் 50, ப.204.
8. F.R.Hemingway, Madras District, Gazetters, Tanjore, p.2.
9. இரா.குமாரசாமி, மூலிகை அடிப்படையில் தஞ்சாவூர், ப.4.
10. மேற்படி,ப.4.
11. ஆ.குணசேகரன், தஞ்சை சரஸ்வதி மஹால் நூலகம், ப.XVIII.
12. மேற்படி,ப.XIX.
13. செ.இராசு,நெஞ்சையள்ளும் தஞ்சை, பக்.9-10.
14. ஆ.குணசேகரன், தஞ்சை சரசுவதிமகால் நூலகம், ப. XVIII.
15. F.R.Hemingway, Tanjore Gazetter, P.2-3.
16. செ.இராசு, நெஞ்சை அழ்லும் தஞ்சை, பக்,75-76

## துணைநூற்பட்டியல்

1. இராசு.செ. தஞ்சை மராட்டியா; செப்பேடுகள் 50› தமிழ்ப் பல்கலைக்கழகம். 1982.
2. இராசு. செ., நெஞ்சை அள்ளும் தஞ்சை, கொங்கு ஆய்வு மையம், தஞ்சாவூர் 1994.
3. குணசேகரன். ஆ. தஞ்சை சரஸ்வதி மஹால் நூலகம், சைவ சித்தாந்த திருநெல்வேலி தென்னிந்திய நூற்பதிப்புக் கழகம் லிட்› சென்னை.
4. குமாரசாமி, இரா. மூலிகை அடிப்படையில், தஞ்சாவூர்.
5. சோமலே, தஞ்சாவூர் மாவட்டம், பாரி நிலையம், சென்னை, 1961.
6. பாலசுப்ரமணியன் குடவாயில், தஞ்சாவூர், திவாவடுதுறை ஆதினம், அன்னம் வெளியீடு, 4-ம் பதிப்பு, 2012.
7. திருநாவுக்கரசர், தேவாரத்தலமுறை, காசி மடம், திருப்பனந்தாள், 1967
8. பக்கிரிசாமி, கே.வி.தஞ்சாவூரும் பெரியக்கோவி லும், வெற்றிவேல் பிரஸ், தஞ்சாவூர், 1960.
9. Hemingway, Madras District Gazetteers, Tanjore, Madras, 1906
10. Hemingway, Tanjore Gazetters, Vol.I, Cosmo Publications, India, 2000